THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA

# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

# தூது

நற்செய்தி துணுக்குகள்

## பிப்ரவரி 2021(மடல் - 21) செய்தி-2

"கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும். அமுக்கி, குலுக்கி, சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள். நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கு அளக்கப்படும்" (லூக்கா 6:38).

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| ஆண்கள் பகுதி | 6 |
| பெண்கள் பகுதி | 9 |
| Children's Corner | 12 |
| Youth Corner | 22 |
| வேத வினாக்கள் | 23 |
| கோதுமை மணி | 26 |
| துணுக்குகள் | 28 |
| ஆலய பக்கம் | 31 |

# ஆயர் மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் திருப்பெயராலே வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த 2021-ஆம் ஆண்டின் இரண்டாவது மாதத்தைக் காண செய்த ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். இந்த மாதம் நம் ஆலயத்திலே நன்றி படைப்பின் ( Thanks Giving) பண்டிகையை கொண்டாட இருக்கிறோம். ஜெபத்தோடு நாம் ஆயத்தப்படுவோம்.

***"கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும். அமுக்கி, குலுக்கி, சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள். நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கு அளக்கப்படும்" (லூக்கா 6:38).***

இஸ்ரவேல் மக்கள் கடவுள் செய்த நன்மைகளை நினைத்தும், தாங்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளை நினைத்தும், விடுதலை வாழ்வை நினைத்தும், ஒவ்வொரு நிலைகளிலே தங்கள் காணிக்கைகளை செலுத்தினர் (லேவி.27:30-32).

எல்லா விளைச்சலும் இறைவனின் ஆசீர்வாதமாக கருதப்படுவதால் முதற்பலன்களின் ஒரு பகுதியை காணிக்கையாக படைக்க நாம் கடமை பட்டிருக்கிறோம். எப்படி படைக்க வேண்டுமென்று பார்க்கும்பொழுது:

**1. உன்னிடத்தில் உள்ளதைக் கொடு**

திருமறையில் பழைய ஏற்பாட்டில் படிக்கும்பொழுது, சாறிபாத் விதவை கடுமையான சூழலிலும், ஏழ்மையான நிலையிலும், கடவுளின் ஊழியர் எலியாவிற்கு தன்னிடத்தில் உள்ள உணவை முழுமையாக பகிர்ந்து கொண்டதினால், ஆண்டவரின் முழுமையான ஆசீர்வாதத்தை நிறைவாக பெற்றுக்கொண்டாள் (1ராஜா: 17: 10-17).

புதிய ஏற்பாட்டிலே மாற்கு 12:38-44ல், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து காணிக்கை படைத்தலை கவனித்து பார்க்கும்பொழுது, எதிர்காலத்தை கருத்தில் கொள்ளாமல் காணிக்கை படைத்தாள் அந்த ஏழை விதவை. இயேசுகிறிஸ்துவும் அதை பாராட்டினார்.

ஏழையான விதவை தன்னுடைய வறுமையிலிருந்து ஜீவனத்துக்கு உண்டானதை எல்லாம் (இரண்டு காசை) போட்டுவிட்டாள். அப்படி நம்மிடத்தில் உள்ளதை கொடுக்கும்போது நிச்சயமாய் ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பார்.

**2. உள்ளத்திலிருந்து கொடு**

பழைய ஏற்பாட்டின் காலத்தில் ஆபேல் காணிக்கை படைக்கும் போது முதன்மையானதைக் கொடுத்தான். அப்படி உள்ளத்தின் மனநிறைவோடு நாம்

காணிக்கை படைக்க வேண்டும். அப்பொழுது கடவுளின் நிறைவான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

அன்னைத் தெரெசா வாழ்ந்த காலங்களிலே, "உள்ளத்திலிருந்து ஏழைகளுக்கு முழு அன்போடு கொடுக்க வேண்டும்" என்று கூறியிருந்தார். அப்படி நம் உள்ளத்திலிருந்து ஆண்டவருக்கு முழுமையானதைக் கொடுக்க நம்மை அர்ப்பணிப்போம்.

**3. உன்னையே கொடு**

மக்கெதோனியா மக்கள் தாங்கள் நினைத்தபடி மாத்திரம் கொடாமல், தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத் தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள் (2கொரி.8:5).

எல்லாவித கடினமான சூழ்நிலையிலும் தங்களையே ஆண்டவருக்காக முழுவதுமாக அர்ப்பணித்தார்கள். நாமும் நம்மை முழுமையாக ஆண்டவருக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

இந்த கடினமான COVID-19 சூழ்நிலையிலும் ஆண்டவர் கொடுத்த சுகத்தை, பாதுகாப்பை எண்ணி அவர் தந்த ஆசீர்வாதத்தை நினைத்து, அர்த்தமுள்ள நன்றி படைப்பு (Thanksgiving) பண்டிகையை, ஜெபத்தோடு கொண்டாட ஆயத்தப்படுவோம். ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக!

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : jerirajkumar@gmail.com*

*கிறிஸ்துவின் பணியில்*
*தங்கள் அன்பிற்குரிய ஆயர்*
*அருள்திரு. ஜெர்ரி ராஜ்குமார்.* C



## மார்ச் மாத தலைப்பு
## ஜெபம்

# ஆயரம்மா மடல்



## அழகு பெண்ணே உனக்காக......

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, உங்கள் அனைவரையும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்திலே வாழ்த்துகிறேன். இந்த புதிய வருடத்தில் முதலாம் மாதத்தை நிறைவு செய்து இரண்டாம் மாதத்தில் அடியெடுத்து வைத்திருக்கும் நம் ஒவ்வொருவரையும் ஆண்டவர் தாமே ஆசீர்வதிப்பாராக; கடந்த மாதம் முழுவதும் நம்மை கண்மணி போல பாதுகாத்து வழிநடத்திய ஆண்டவருக்கு குடும்பமாக நன்றி செலுத்துவோம்.

நான் ஏற்கனவே அறிவித்தபடி இந்த வருடம் முழுவதும் "அழகு பெண்ணே உனக்காக" என்ற தலைப்பின் கீழ் சில காரியங்களை வேதாகம அடிப்படையில் சிந்திக்க உள்ளோம். இந்த மாதத்திற்கான கருப்பொருள் "கண்கள்".

நம் கண்கள் நம் அருமை ஆண்டவரின் உன்னத படைப்பாகும். கண்களின் ஒவ்வொரு பகுதியும் ஆண்டவரால் அளவிடப்பட்டு அருமையாக படைக்கப்பட்டுள்ளது. இதில் சிறு பிழை ஏற்பட்டாலும் நம் பார்வையை பாதிக்கும் அல்லவா?

நம் சுபாவத்தை கண்களின் பார்வை வெளிப்படுத்துகிறது. நம் பலவிதமான உணர்வுகளை, உதாரணமாக, இரக்கக்கத்தை, அன்பை, கனிவை, பாசத்தை, கோபத்தை வெளிப்படுத்துவதும் நம் கண்கள் தான்.

நம் கிறிஸ்துவின் கண்கள் புறாக்கண்கள் என உன்னதப்பாட்டு வர்ணிக்கிறது.

"அவருடைய கண்கள் தண்ணீர் நிறைந்த நதிகளின் ஓரமாய்த் தங்கும் புறாக்கண்களுக்கு ஒப்பானவைகளும், பாலில் கழுவப்பட்டவைகளும், நேர்த்தியாய்ப் பதிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது" (உன். 5:12).

ஆம் மன்றாடி ஜெபித்து நீர்த்தேங்கி நிற்கும் புறாக்கண்கள். ஓ! பாலில் கழுவப்பட்ட கண்களாம், நேர்த்தியாய் பதிக்கப்பட்டவைகளாம். அடடே, எத்தனை அழகான கண்கள் நம் கிறிஸ்துவின் கண்கள்!

கிறிஸ்துவின் அழகான கண்களைப் பெற யாருக்குத்தான் ஆசையில்லை? வேதத்தில் இதற்கான ஆலோசனையும் உள்ளது. அழகுக் கண்கள் பெற வேதம் தரும் ஆலோசனையை தியானிப்போமா?

### 1. நேராய் நோக்க வேண்டும்

"உன் கண்கள் நேராய் நோக்கக்கடவது. உன் கண்ணிமைகள் உனக்கு முன்னே செவ்வையாய்ப் பார்க்கக்கடவது" (நீதி.4:25).

ஆம், இந்த உலகில் நமது நோக்கமெல்லாம் கிறிஸ்து மட்டும்தான். நமது பார்வை எல்லாம் கிறிஸ்துவின் மீது மட்டும் இருக்க வேண்டும். இந்தப் பக்கம், அந்தப் பக்கம் திரும்பினால் உலகத்தின் கவர்ச்சி இழுத்து பின்னுக்குத் தள்ளிவிடும். கிறிஸ்துவை மட்டும் பார்க்கப் பழகினால் அவர் ரூபமும், சாயலும், நம் மனதையும், சிந்தையையும் நிரப்பும்.

கிறிஸ்துவை மட்டும் நோக்கிப் பார்க்கும் கண்கள் அழகான கண்கள்தாம். ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக நம் கண்களை ஏறெடுக்கப் பழகினால், பரத்திலிருந்து நமக்கு ஒத்தாசை வரும். நம் கண்களின் அழகும் கூடும்.

**2. கலிக்கம் போட வேண்டும்**

"கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது. உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும். இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்" (மத்தேயு 6:22,23).

கண்கள் நேராய் பார்க்க கண்களுக்கு கலிக்கம் போட வேண்டும். குதிரைகளுக்குப் பொதுவாக போடுவார்கள். இரண்டு பக்கங்களிலும், சதுரமான, கருப்பான, தட்டையான தகடு இணைத்திருப்பார்கள். குதிரையால் வலது பக்கம், இடது பக்கம் சாய்ந்து ஓடாமல் ஓட இது உதவும்.

கலிக்கம் என்பது நேராய் ஓட மட்டுமல்ல. இது கண்களுக்கு போடப்படும் ஒரு வகை மருந்து என்றும் வேத ஆராய்ச்சியாளர் கூறினார்.

ஏவாள் தன் கண்களுக்கு கலிக்கம் போடாததால் பாவம் நுழைந்துவிட்டது.

லவோதிக்கேயா சபைக்கு சொல்லப்பட்டது பின்வரும் ஆலோசனை. "நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன் (வெளி. 3:18).

ஆம், இன்றைக்கும் கிறிஸ்துவைப் பார்க்க முடியாதபடி மனக்கண்கள் குருடாய்ப்போன பரிதாபமான நிலை உள்ளது. கிறிஸ்துவின் முகத்தை தேடாமல், தேட விரும்பாமல் வாழ்ந்தால் ஆவிக்குரிய குருட்டாட்டமே வரும் என்பதில் சந்தேகமில்லை.

- தொடரும்

இப்படிக்கு

உங்களுக்காக எப்பொழுதும் ஜெபிக்கும்

***திருமதி. ஏஞ்சலின் ஜெர்ரி ராஜ்குமார்***

**ஆயரம்மா**



## நன்றி படைப்பு

**நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள். (கொலோ 3:15(b))**

ஒரு தமிழ்ப் பத்திரிகையின் ஞாயிறு தின இணைப்பில் ஒரு நிகழ்ச்சிக் குறிப்பொன்று இவ்வாறு எழுதப்பட்டு இருந்தது. அதை எழுதி இருந்த அந்த மனிதர், ஒரு ஆடிட்டர் அலுவலகத்தில் ஆடிட்டருடன் பேசிக்கொண்டு இருக்கும்பொழுது, இன்னொரு நபர் உள்ளே வந்து தம்முடைய வருமான வரி கட்டுவதற்கான பேப்பர்களை ஆடிட்டரிடம் கொடுத்தார். அந்த பேப்பர்களை வாங்கி பரிசீலித்த ஆடிட்டர் அவர் கட்டவேண்டிய வரிகளை எப்படியெல்லாம் குறைக்கலாம் என்பதற்கான வழிகளையெல்லாம் சொல்ல ஆரம்பித்தார். ஆனால் அந்த நபர் குறுக்கிட்டுத் தாமும், தம்முடைய சகோதர, சகோதரிகள் எல்லோரும் சிறுவயதிலிருந்தே அரசாங்க உதவித்தொகையை வைத்துத்தான் படித்துக் கல்லூரிவரை சென்றதாகவும் அதற்கு நன்றி தெரிவிக்கும்பொருட்டு அரசாங்கத்திற்கு கட்டவேண்டிய முழுவரியையும் கட்ட விரும்புவதாகவும் தெரிவித்தார். அவருடைய நேர்மையைக் கண்ட ஆடிட்டர் தம்முடைய பதிலையும் அந்த நபரின் செயலையும் குறித்து ஆச்சரிப்பட்டாராம். இதை கேட்டுக்கொண்டிருந்த இந்த நபர் அவருடைய நேர்மையைப் பாராட்டி எழுதவேண்டுமென அவருக்குத் தோன்றியதால் அந்தச் செய்தித்தாளில் ஞாயிறு இணைப்பில் இதுபற்றி எழுதி இருந்தார்.

முழு தொகையும் கட்டவேண்டும் என்பது கட்டாயமாக இல்லை என்றாலும் அந்த மனிதரின் செயல் ஒரு நன்றியறிதலின் வெளிப்பாடாக அமைகிறது. உலகப்பிரகாரமான ஒரு நன்மையைப்பெற்ற ஒரு மனிதனுடைய நன்றி அறிதல் இவ்வாறு வெளிப்படுமாயின், அனுதினமும் அளவில்லா நன்மைகளை அளித்து நம்மை பராமரித்து, பாதுகாத்து வரும் ஆண்டவருக்கு நன்றி சொல்வது என்பது எவ்வாறு அமைய வேண்டும் ?

**<u>இறைவனின் எதிர்பார்ப்பு என்ன?</u>**

இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில், அநேகரைக் குணப்படுத்தி, அநேகரைப் பிசாசின் கட்டுக்களில் இருந்து விடுதலையாக்கி, பலருக்கும் பல நன்மைகளைச் செய்தார். ஒருமுறை அவரிடம் பத்துக் குஷ்டரோகிகள் தாங்கள் சொஸ்தமாக வேண்டுமென வந்திருந்தனர். அந்நாட்களில் குஷ்டரோகிகளை யாரும் அணுகமுடியாது; அவர்கள் சமுதாயத்திலிருந்து விலக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் சுகமடைந்தால் முதலாவது ஆசாரியருக்குத் தங்களைக் காண்பிக்க வேண்டும் என்பது கட்டளை. இயேசு தம்மை நாடிவந்த பத்துக் குஷ்டரோகிகளையும் நோக்கி, "நீங்கள் போய் ஆசாரியருக்கு உங்களைக் காண்பியுங்கள்" என்றார். அப்படியே அவர்கள் போகும்போதே குணமானார்கள்.

அவர்களில் ஒருவன், தான் குணமாகிவிட்டதைக் கண்டதும், திரும்பி இயேசுவிடம் வந்து அவர் பாதத்தில் விழுந்து நன்றி செலுத்தினான். இயேசு அவனிடம் “குணமானது பத்துப்பேர் அல்லவா? மற்ற ஒன்பதுபேரும் எங்கே” எனக் கேட்டார். அந்த ஒன்பதுபேரும் பின்பும் வரவேயில்லை.

மற்ற ஒன்பது தொழுநோயாளிகளும் பொல்லாதவர்கள் அல்ல. இயேசுமீது தாங்கள் வைத்திருந்த விசுவாசத்தை அவர்கள் வெளிப்படையாகக் காட்டினார்கள், அவருடைய அறிவுரைக்கு மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்தார்கள்; ஏன், தாங்கள் குணமானதை ஆசாரியர்களிடம் காட்டுவதற்காக எருசலேமுக்கும் போனார்கள். இயேசு இரக்கப்பட்டு செய்த உதவியைக் குறித்து அவர்களுக்கு நன்றியுணர்வு இருந்தது, ஆனால் அதை செயல் பாட்டில் காண்பிப்பதற்கு தவறி விட்டார்கள்.

**<u>தாவீதின் நன்றியறிதல்:</u>**

“என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி;" என்று கர்த்தரை ஸ்தோத்தரிக்க ஆரம்பிக்கும் தாவீது இராஜா " அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே ” (சங்.103:1,2)." என்று சொல்லி அதற்கான காரணத்தையும் வெளிப்படுத்துகிறார். அப்படியானால், அவர் செய்த உபகாரம் என்னவென்பதை நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். உபகாரம் என்பது கர்த்தர் நமக்கு செய்த கனிவான செயல்களைக் குறிக்கிறது. அவர் அருளிய நன்மைகளைக் குறிக்கிறது; அவற்றை நாம் மறக்கக் கூடாது. நாம் பிறந்ததுமுதல் இதுவரை நம் வாழ்நாளில் தேவன் நமக்கு செய்த நன்மைகளை, சாட்சிகளை நாம் நினைவுகூர வேண்டியவர்களாக இருக்கிறோம். மற்றவர்கள் நமக்கு செய்த நன்மை, தீமைகளை நினைவில் வைத்திருக்கின்ற நாம், நமக்கு நன்மையையே செய்துவருகின்ற கர்த்தருடைய ஆசீர்வாதங்களை ஒருபோதும் மறக்கலாகாது. சங்கீதம் 103:3-5ஆம் வசனங்களில், ஆண்டவர் நமக்காக என்னென்ன செய்கின்றார் என்பதைக் குறித்து தாவீது சொல்கிறார். நம் கர்த்தராகிய ஆண்டவர் தாமே, நம் அக்கிரமங்களை மன்னிக்கிறார், நோய்களைக் குணமாக்குகிறார், ஆத்துமாவைக் காப்பாற்றுகிறார், நம்மை முடிசூட்டுகிறார், அத்துடன் நன்மைகளால் நம்மை திருப்தி ஆக்குகிறார் என்று சொல்லி இறைவன் நமக்கு பாராட்டும் நன்மைகளை பட்டியல் இட்டுக்கொண்டே செல்கிறார்.

**<u>நன்றியறிதலும் காணிக்கையும்:</u>**

காணிக்கை படைத்தல் என்பது வேதத்தின் அடிப்படையிலே நன்றியறிதலின் ஒரு வெளிப்பாடாக அல்லது செயல்பாடாக திருச்சபையின் ஒழுங்கில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ஆபேலின் காணிக்கையை ஆண்டவர் ஏற்றுக்கொண்டதும் , ஏழை விதவையின் காணிக்கையை இயேசு அங்கீகரித்ததையும் நாம் அறிவோம். காணிக்கையை விட அதை செலுத்துகிறவர்களின் உள்ளமும் விசுவாசமுமே முக்கியமானது. எபிரேயர் (11.17)-ல் "விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்ட போது, ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான்" என்று பவுல் அடிகளார் சுட்டிக்காண்பிப்பதை பார்க்கிறோம்.

நன்மை பெற்றுக்கொள்வதற்குக் காட்டுகின்ற தீவிரத்தை, நன்றி சொல்லுவதில் நாம் காட்டுவதில்லையே, ஏன்? வாழ்க்கையில் தேவைகள் ஏற்படும்போது, "இயேசுவே எனக்கு உதவி செய்யும். என் தேவைகளைச் சந்தியும்" என்று கதறி ஜெபிப்போம். தேவன் நமது ஜெபங்களைத் தள்ளுகிறவர் அல்ல. அவர் நமக்குக் கிருபையாய் தந்த பதில்களைக் கணக்கிட முடியுமா? பதில் கிடைத்தவுடன் உணர்ச்சிவசப்படும் நாம் உண்மையாகவே தேவனுக்கு நன்றியாய் ஜீவிக்கிறோமா? திரும்பிவந்த குஷ்டரோகியைக் குறித்து மகிழ்ச்சியடைந்த ஆண்டவர், இன்று நம்மைக் குறித்தும் மகிழ்ச்சியடைவாரா? அவர் செய்த நன்மைகளை எண்ணி எண்ணி வாழ்நாள் முழுவதும் அவருக்கு நன்றி செலுத்துகிறவர்களாய் காணப்படுகிறோமா? தேவன் தாமே தூய ஆவியானவரின் உதவியோடு நன்றியறிதல் உள்ளவர்களாய் நம்மை கிறிஸ்துவுக்குள் உள்ள உறவில் மென்மேலும் பலப்பட கிருபை அருள்வராக .. ஆமென்.

எண்ணிப் பார்க்க எத்தனை நன்மை எந்தன் வாழ்வினிலே
எண்ணுவதற்க்கும் அதிகமாக என்னில் தருபவரே ...
இன்னும் நிற்பதும் அழியாதிருப்பதும் இயேசுவின் கிருபை அல்லோ ...!!
எண்ணும் பொழுதில் எழும்பும் துதிகள் எண்ணி முடியாதல்லோ..!
(எபே. 3:20, புல 3:22)

சிநேகிதனுக்காய் ஜீவன் விடுதலில் சிறந்த அன்புண்டோ ..?
பாவி எனக்காய் ஜீவன் தரவும் பாரில் உறவுண்டோ . ..?
அவரை தந்து இவ்வளவாய் உலகில் அன்பு கூர்ந்தாரே ...!
சிலுவை மரத்தில் இயேசு ரத்தம் சிந்தி மரித்தாரே ...!! (யோவா 15:13 , 3:16)

வானமும் பூமியும் ஒழிந்தாலும் அவர் வாக்குகள் மாறாதே ..!
மலைகள் குன்றுகள் பெயர்ந்தாலும் அவர் கிருபை மாறாதே ..!
நல்லவர் இயேசு நமக்கு செய்த நன்மைகளை நினைப்போம் ...
நன்றியுள்ள இதயத்தோட என்றும் துதித்திடுவோம் ...!! (மத் 24:35, ஏசா 54:10)

பூமியின் குடிகளே கெம்பீரமாய் அவர் சன்னதிமுன் வருவோம் ...!
மகிழ்வோடே ஆராதித்து மன்னனைப் போற்றிடுவோம் ...!!
நன்றியறிதல் உள்ளோராய் நாம் நாளும் வாழ்ந்திடுவோம் ...!
என்றும் அவரோடிணைந்த வாழ்வில் வென்றே சிறந்திடுவோம் ..!! (சங் 98:4)

கிறிஸ்துவில் அன்புடன்
**ஜெய சந்திர ராஜா**



## நன்றி படைத்தலின் அவசியம்



ஏறத்தாழ 23,000 முறை ஒரு நாளைக்கு ஒரு மனிதன் மூச்சு விடுகிறான். நாம் ஒவ்வொரு முறை சுவாசிக்கும்போதும் ஆக்ஸிஜனை உள்ளிழுத்து, கார்பன் டை ஆக்ஸைடை வெளிவிடுகிறோம். மூச்சை உள்ளிழுத்து வெளிவிடுவது நமக்கு ஒரு சாதாரணமான காரியமாய் தெரிந்தாலும், அது அத்தகைய சாதாரணமானதல்ல. நம்மை சுற்றியுள்ள காற்று மாசு படிந்த காற்றாயிருப்பின், அதை சுவாசிக்கும்போது நமது உடலுக்கு கேடானதை நாம் சுவாசிக்கக் கூடும். அல்லது நம் சுவாச உறுப்புகள் ஒருவேளை ஏதோ ஒரு காரணத்தினால் சரியாக செயல்படா விட்டால் சுவாசக்கோளாறு ஏற்படக்கூடும். அது சற்று மோசமானதாக இருந்தால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு நாம் மரிக்கவும் நேரிடலாம். இப்போது நம்மை பயப்படுத்திக் கொண்டிருக்கிற கரோனா வைரஸ் கூட மூச்சுத்திணறலை உண்டாக்கும் கேடுள்ளதை நாம் அறிவோம். அப்படியாயின் ஏறத்தாழ 23,000 முறை ஒரு நாளைக்கு மூச்சு விடுகிற நாம், ஒரு நாளைக்கு எத்தனை முறை நம் ஆண்டவர் இயேசுவுக்கு நன்றி செலுத்துகிறோம்?

யாக்கோபு 1:17 சொல்லுகிறபடி நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது. நாம் நம் ஆண்டவரிடமிருந்து பெற்றுள்ள நன்மைகள் அதிகம். அவையனைத்தையும் பார்க்கும்போது நாம் நம் ஆண்டவருக்கு எத்தனை கோடி நன்றிகள் சொன்னாலும் போதாது.

### பழக்கமாக மாற்றிக்கொள்ள வேண்டியது நன்றி படைப்பு

நன்றி படைப்பை நாம் நம்முடைய பழக்கமாக மாற்றிக்கொள்ள வேண்டும். நன்றி செலுத்துவது என்பது தானாக வருவதில்லை. ஏதாவது ஒரு கஷ்டம் உண்டானால் உடனே முறுமுறுக்கிற நாம், அனுதின வாழ்வில் நம்முடைய அன்றாடத் தேவைகளை தந்து, சுகத்தைக் கொடுத்திருக்கிறதை எண்ணி நன்றி செலுத்த வேண்டும். குறைந்தது ஒரு நாளைக்கு ஒரு பத்து காரியங்களையாவது கண்டுபிடித்து ஆண்டவருக்கு நன்றி செலுத்த முயற்சித்தால், நாள் முழுவதும் நம்முடைய கவனம் நாம் பெற்ற நன்மைகளை கண்டுபிடிப்பதிலேயே செல்லும். போகப் போக அந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகும். அப்போது தாவீதரசனைப் போல கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன். அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும் என்ற நிலையை நாம் அடைவோம்.

எல்லாக் காரியங்களும் நன்மையாய் போய்க்கொண்டிருக்கும் போது, நன்றி செலுத்த மறந்துபோன குஷ்டரோகிகளைப் போல நாம் ஆண்டவரை மறந்துவிடுவதுண்டு. சிறிய காரியமோ, பெரிய காரியமோ ஆண்டவருக்கு நன்றி செலுத்த கடமைப் பட்டுள்ளோம். அவருடைய அன்பு, இரட்சிப்பு, பாதுகாப்பு இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

## சூழ்நிலையைக் கடந்தது நன்றி படைப்பு

எல்லா சூழ்நிலையிலும் கர்த்தருக்கு நன்றி செலுத்த நாம் கற்றுக்கொள்ள வேண்டும் (1தெச. 5:18).

- தாவீது தனக்கு சோதனைகள் உண்டான சூழ்நிலைகளிலும் கர்த்தருக்கு நன்றி செலுத்தினான் (சங்.26:7).
- மனந்திரும்பி பாவத்தை விட்டு இஸ்ரவேலர் திரும்பின போது, எசேக்கியா கர்த்தருக்கு நன்றி செலுத்தினான் (2நாளா. 31:2).
- மீனின் வயிற்றிலிருந்து விண்ணப்பம் பண்ணிய யோனா, கர்த்தருக்கு நன்றி செலுத்துவதாக பொருத்தனை பண்ணினான் (யோனா 2:9).
- மறைபொருளைத் தேவன் தனக்கு வெளிப்படுத்தியபோது, பெருமைப்பாராட்டமல், தனக்கு ஆதாயத்தைத் தேடாமல், தேவனுக்கு நன்றி செலுத்தினார் தானியேல் (தானி. 2:19-23).



வேதாகமத்தில் இப்படி அநேக...... எடுத்துக்காட்டுகள் உண்டு.

கர்த்தருடைய வழி சுழற்காற்றிலும், புயல்காற்றிலும் இருக்கிறது. எனவே சுழற்காற்றோ, புயல்காற்றோ நம்மேல் அடித்தாலும், காற்றை தன் வார்த்தையினால் அடக்கி ஆள்கிற தேவன் நம்மோடு இருப்பதால் நாம் அவருக்கு நன்றி செலுத்தி அமைதியோடு அந்த சூழ்நிலையை மேற்கொள்ளலாம். அப்போது அது நமக்கு வெற்றியாக முடியும். அதன் மூலம் நம் விசுவாசமும் பலப்படும். ரோமர் 8:28 சொல்கிறபடி அவரிடத்தில் அன்பு கூருகிற நமக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்பதை மறந்து விடாது, அவருக்கு நன்றி செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யும்போது, கஷ்டமான நெருக்கமான அனுபவங்கள் மூலம் நாம் பெற்ற ஆசீர்வாதங்களை ஏற்ற வேளையில் நம்மால் உணர்ந்து கொள்ள முடியும்..

அது மட்டுமல்லாது, நன்றி உணர்வோடு நாம் நம் இயேசுவுக்கு நன்றி செலுத்துவது நமக்கு மகா பெரிய பலத்தை கொடுக்கும். அது நம் எதிராளியாகிய சாத்தானை நம்மை விட்டு விரட்ட போதுமானதாயிருக்கும். எனவே நமக்கு தேவன் அருளிய நன்மைகளை ஒரு குறிப்பில் எழுதி வைத்து, தினமும் ஆண்டவருக்கு நன்றி செலுத்துவது நல்லது. அப்படி செய்யப் பழகும்போது, நம் மனம் ஒவ்வொரு காரியத்துக்கும் ஆண்டவருக்கு நன்றி செலுத்த பழகி விடும். உள்ளம் பூரண சமாதானத்தால் நிரம்பும். அப்போது நமது சரீரமும் சுகத்துடன் இருக்கும். தெய்வீக பிரசன்னத்தில் நாம் இருப்பதை நாமும், நம்மோடு இருப்பவர்களும் உணர்ந்து கொள்ள முடியும்.

**ஜெபசீலி ஆசீர்**



## வேதாகமப் பெண்கள்

### ஏழை விதவையின் காணிக்கை

(மாற்கு 12:41-44; லூக்கா 21:1-4)

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இருந்த நாட்களில் ஒரு சில நபர்கள் அவரால் பாராட்டப்பட்டனர். அதில் ஒருவர் தான் இந்த விதவை. மற்ற எல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய் போட்டாளென்று பாராட்டினார். இயேசு தேவாலயத்திற்கு சென்றிருந்த போது காணிக்கைப் போடுகிறதைப் பார்த்துக் கொண்டிருந்தார். பணக்காரரும், ஏழைகளும், காணிக்கைப் போடுகிறதைக் கண்டார். ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய் போட்டார்கள். இந்த ஏழை விதவையோ இரண்டு காசுப் போட்டாள். எப்படியெனில் மற்றவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்து எடுத்துப் போட்டார்கள். ஆனால் இந்த விதவையோ தன் வறுமையிலிருது தனக்கு உண்டானதையெல்லாம் போட்டதால் இயேசு சீஷர்களிடம் தன் ஜீவனத்திற்கு உண்டாயிருந்த பணம் முழுவதையும் போட்டு விட்டாள் என்று பாராட்டினார். இந்த இரண்டு காசு பாலஸ்தீனா தேசத்தில் பழக்கத்திலிருந்த மிகச் சிறிய காசு. மிகவும் அற்பமான மதிப்புடைய பணம். ஆனால் அவள் மனப்பூர்வமாய் கொடுத்தாள். நாம் மனப்பூர்வமாய் உற்சாகத்தோடு அவருக்கு காணிக்கை கொடுப்பதுதான் அவருடைய விருப்பம். நம்முடைய மனதும் இதயமும் ஒன்றுபட்டு நன்றியுள்ள இருதயத்துடன் காணிக்கையை ஆண்டவருக்கு செலுத்த வேண்டும். தேவனிடத்திலிருந்து எல்லாவற்றையும் பெற்றுக் கொண்ட நாம் மனப்பூர்வமாய் செய்ய வேண்டும் என்று ஆண்டவர் எதிர்பார்க்கிறார். நம் மனதை, நம் நேரத்தை, நம் உழைப்பை, நம் காணிக்கைகளை, ஏன் நம்மையே ஆண்டவருக்கு கொடுக்க வேண்டும். தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாகிய தாவீது மனப்பூர்வமாய் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது. உமது கரத்தில் வாங்கி உமக்கு கொடுத்தோம் என்று சொல்கிறார். இருதயமும், சிந்தையும் இணைந்து நன்றி பலிகளை செலுத்தும்போது அந்த காணிக்கை தேவனால் புகழப்படக் கூடியதாய் இருக்கிறது. பணத்தில் மேல் அவள் நம்பிக்கை இல்லாமல் அதைக் கொடுத்த கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்தாள். தன் வறுமையில் இருந்து ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டதால் இவள் சுயநலமற்ற வாழ்வு வாழ்ந்த பெண்மணி என்றால் மிகையாகாது. இயேசு பணத்தை பார்க்கவில்லை. குணத்தைப் பார்க்கிறார். நம் ஆவி, ஆத்துமா, சரீரம் எல்லாவற்றையும் அவரிடத்தில் ஒப்படைப்போம்.

**திருமதி. ஷர்மிளா ராஜேஷ்**



Dear Children,

Greetings!!

It seemed like just yesterday we stepped into a new year 2021, and already a month has gone by. Are you happy? You should be, because you are God's children, safe under the shadow of his wings. Are you worried? Troubled about something? Cast all your anxiety on him because he cares for you (1 Peter 5:7).

The theme for this month is "Thanksgiving". But does it feel like this past year has given very little to be thankful for?

Between a pandemic, isolation, unrest, and the cancellation/postponement of just about everything, 2020 has caused anxiety, frustration, and discontentment for many people. Instead of counting our blessings, we tend to focus on the number of things that have gone wrong.

However, our losses can help remind us of gifts we often take for granted, making us more grateful for all we have been given. Sure, we miss our friends, but we see our family more these days. Some have gained weight, while others have discovered new hobbies in cooking, drawing and music. Most importantly, we have found new online ways to meet, worship and learn about our Lord Jesus.

"Thanksgiving" is a great way to remember all the amazing things God has done for us. But as Christians, we need to realize our ultimate purpose.

1. We were *Created* for Thanksgiving – Firstly, God created humanity for Thanksgiving. We exist to appreciate God. He created us to honor him by giving him thanks.

2. *Fallen* from Thanksgiving - Secondly, all of us have failed miserably in appreciating God as we should.

3. *Redeemed* by Thanksgiving -Thirdly, although we failed God, he never failed us. God himself, in the person of his Son, Jesus, entered into our thankless world, lived in flawless appreciation of his Father, and died on our behalf.

4. *Freed* for Thanksgiving - Finally, by faith in Jesus, we are redeemed, and freed to enjoy the pleasure of being doubly thankful for God's favor toward us — not only as his creatures, but also as his redeemed.

The book of Pslams is a collection of sacred songs sung by the people of Israel in their worship of God. Paul in his letter to the Ephesians in Chap. 5:19, encourages the believers to - Sing psalms and hymns and spiritual songs among themse lves, making music to the Lord in their hearts.

This Thanksgiving let us give Thanks with the help of the Holy Spirit- through Song and Psalm, in our hearts and voices, to the Glory of God the Father, and our Lord Jesus Christ.

## PSALMS: A BOOK OF POETRY—OLD TESTAMENT

**Authors**: David, Asaph, sons of Korah, Solomon, Heman, Ethan, Moses

**When It Happened**: About 1491–500 BC

**Chapters**: 150

**Key People**: King David

**About God**: God is great and greatly to be praised. He deserves all glory and worship from all of His creation.



**Summary:** The book of Psalms is a book of prayers and hymns, meant to draw our attention from ourselves and to our mighty God. It is a collection of praises to our God. The psalms emphasize man's position before a perfect, holy God. This sets God in His rightful place—as Ruler over the affairs of the world and all mankind. The psalms include singing praises, giving thanks, and crying out for help.

## SOME GEMS FROM THE PSALMS

There are many treasures to be gleaned from studying the book of Pslams. The below serve to illustrate a few…




Praise the LORD, O my soul, and forget not all his benefits– – PSALM 103:2 NIV




Wherewithal shall a young man cleanse his way? by taking heed thereto according to thy word. –PSALM 119:9 KJV

## FIND YOUR WAY THROUGH THE MYSTERIOUS MAZE

### An Ever Present Help... Ps. 121:1





Let us remember like the Psalmist...My help comes from the LORD, the Maker of heaven and earth.



When we like the psalmist wonder... I lift up my eyes to the mountains— where does my help come from?

## CHOOSE THE RIGHT ANSWER FROM THE OPTIONS GIVEN BELOW

1. Which famous Psalm of David contains the line, "he maketh me to lie down in green pastures"?
A. Psalms 21 B. Psalms 22 C. Psalms 23 D. Psalms 24

2. What is the first line of Psalm 1?
A. Why standest thou afar off, O Lord? B. Blessed is the man that walketh not...
C. Give Thanks to the Lord for he is good. D. Worship the Lord with gladness.

3. How does Psalm 100 say we should come before the Lord's presence?
A. With Joy B. With Prayer C. With Thanks giving D. With singing

4. What does Psalm 16 say there is in the Lord's right hand?
A. Pleasures for evermore B. Joy and Eternal Life
C. Salvation and Righteousness D. Gifts of Light and Life

5. How many types of musical instruments are mentioned in Psalm 150?
A. 3 B. 5 C. 8 D. 10

6. Which is the shortest Psalm?
A. 24 B. 56 C. 117 D. 118

7. Which is the longest Psalm?
A. 35 B. 90 C. 119 D. 149

8. What is the "chorus" in Psalm 136 which is repeated in every verse?
A. For his mercy endureth forever B. For the Lord is good in all the earth and heavens C. For his statutes are right and his judgements true D. For his righteousness is above all other

9. Complete the verse - The __________is the LORD's, and the fullness thereof.... (24:1)
A. Earth B. Sea C. Universe D. Solar system

10. Complete the verse - Delight thyself also in the LORD; and he shall give thee _________________. (37:4)
A. All your Needs B. Fame C. Riches D. The desires of thine Heart

## SOMETIMES BLESSINGS COME HIDDEN

These neighbors are celebrating thanksgiving together. Can you find the hidden objects in the picture?
Color them in the picture when you find them.



## WHO AM I TO GOD?...

*When I consider your heavens, the work of your fingers the moon and the stars, which you have set in place, what is man that you are mindful of him, the son of man that you care for him? Yet, you made him a little lower than the heavenly beings and crowned him with glory and honor. Ps. 8:3-5*

### *A Thank You Prayer*

*Lord, thank you that you are mindful of me. That you actually bend down and listen to me when I pray. That you actually think of me. Not because I deserve it. But because you love me. Lord, may I never take your love for granted, but may I always stand in awe of your love for me. In Jesus name, Amen.*

## A VERY PRECIOUS CHILD INDEED...

### BEING THANKFUL FOR GOD'S CONSISTENCY

There is a fictional story told of a day when the sun did not rise. Six o'clock came, and there was no sign of dawn.



At seven o'clock, there was still no ray of light. At noon, it was as black as midnight. No birds sang to break the silence. Then came the long black hours of the afternoon. Finally, the evening arrived, but no one slept that night. Some wept; some wrung their hands in anguish. Every church was thronged with people on their knees. Thus, they remained the whole night through.

After that long night of terror and agony, millions of eager, tear-streaked faces were turned toward the east. When the sky began to glow red, and the sun rose, there was a loud shout of joy. Millions of lips said, "Bless the Lord, O my soul" because the sun had risen after one day of darkness.

***The very consistency of God's blessings sometimes seems to dull our gratitude. The wonderful thing about the mercies of God is that they are new every morning. Let us remember to be continually thankful to our gracious God.*** "It is of the LORD'S mercies that we are not consumed, because his compassions fail not. They are new every morning: great is thy faithfulness."

## GIVING THANKS – A MISSIONARY STORY



**George Müller (1805-1898)** was a Christian missionary evangelist and a coordinator of orphanages in Bristol, England. Through his faith and prayers (and without asking for money) he had the privilege of caring for over 120,000 orphan children. He also traveled over 200,000 miles (by ship) to preach the Gospel of Jesus Christ in 42 countries and to challenge believers about world missions and trusting God. In his journals, Müller recorded miracle-after-miracle of God's provision and answered prayer. One such miracle is illustrated below.

One morning, all the plates and cups and bowls on the table were empty. There was no food in the larder and no money to buy food. The children were standing, waiting for their morning meal, when Müller said, "Children, you know we must be in time for school." Then lifting up his hands he prayed, "**Dear Father, we thank Thee for what Thou art going to give us to eat**."



There was a knock at the door. The baker stood there, and said, "Mr. Müller, I couldn't sleep last night. Somehow I felt you didn't have bread for breakfast, and the Lord wanted me to send you some. So I got up at 2 a.m. and baked some fresh bread, and have brought it."

Mr. Müller thanked the baker, and no sooner had he left, when there was a second knock at the door. It was the milkman. He announced that his milk cart had broken down right in front of the orphanage, and he would like to give the children his cans of fresh milk so he could empty his wagon and repair it.

Likewise, little children, let us always remember to thank God – our Jehovah Jireh, to meet all our daily needs.

***Note :*** Submit the answers of Bible Quiz to Pastor uncle on or before 25th of every month.

**Dear children,**

**Did you read every article in the children's section? Every article? Then you should have no trouble at all in completing the below sentences… Let's see how well you do it...**

1. The theme for the month of February is - ______________________________.

2. "Thanksgiving" is a great way to remember ____________________________.

3. As Christians, we need to realize our ultimate purpose. We were ______________ for Thanksgiving; ___________________________ from Thanksgiving; ______________________by Thanksgiving; ___________________ for Thanksgiving.

4. The book of Psalms is a book of prayers and hymns, meant to draw our attention _______________________________________________.

5. There are many treasures to be gleaned from studying the book of Pslams. Pslams 103:2 says - _____________________________________.

6. Psalms 121:1 says – My help comes from _________________________.

7. Who am I to God? _________________________________________.

8. The very consistency of God's blessings sometimes seems to dull our gratitude. The wonderful thing about the mercies of God ____________________________________________________________.

9. George Müller had the privilege of caring for over __________________orphan children. He also traveled over ____________________miles (by ship) to preach the Gospel of Jesus Christ in _______ countries.

10. In the missionary story, two people arrived at the orphanage following George Müller's prayer. They were the ______________________ and the _____________________.

I hope you've had as much fun completing the activities as I have had in preparing them.

Look forward eagerly every month to what the Lord has to say to you. Because as the bible says in 1 Corinthians 2:9 - Eye hath not seen, nor ear heard……the things which God hath prepared for them that love him.

God bless,
**Mrs. Briliya Jeyaseelan**



## THANK YOU DEAR GOD, FOR EVERYTHING

I had a dream the other night…
I came down for breakfast, and there was a delicious sandwich on the table.
"Thank you for the sandwich", I told my mother.
"I just put the bread, and cheese together. It was the baker who baked the bread", my mother replied. I left to visit the baker.
"Thank you for the sandwich", I told the baker.
"I just baked the bread. It was the farmer who grew the wheat", the baker replied. I went to visit the farmer.
"Thank you for the sandwich", I told the farmer.
"I just tended to the wheat fields. It was the sun which made the wheat grow.", the farmer replied. I went to see the sun.
"Thank you for the sandwich", I told the sun.
"I just provide light and warmth. It was God who created me and told me what to do", the sun replied.
At that I woke up…
